# மூத்தோரைக் கண்ணியப்படுத்துவோம்

பாடம் 4

பாத்திமா:- அஸ்ஸலாமு அலைக்கும் ஆஇஷா.

ஆஇஷா:- வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹ்.

பாத்திமா:- ஆஇஷா, நாம் இன்று நல்லதொரு பாடத்தைக் கற்றோம். அதை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாமா?

ஆஇஷா:- சொல்லுங்கள். நானும் அதைக் கேட்க ஆசைப் படுகிறேன்.

பாத்திமா:- நாங்கள் இன்று மூத்தோரைக் கண்ணியப் படுத்துவது பற்றிப் படித்தோம்.

ஆஇஷா:- மூத்தோர் என்ற பிரிவில் அடங்குபவர்கள் யார் என்று கூறுவீர்களா?

பாத்திமா:- எம்மிலும் வயது கூடிய அனைவரும் மூத்தோர்களாவர். பெற்றோர், மூத்த சகோதர சகோதரிகள், ஆசிரியர்கள், உலமாக்கள், பெரியவர்கள் அனைவரும் இதில் அடங்குவர்.

ஆஇஷா:- அவர்களைக் கண்ணியப்படுத்துவது பற்றி நபி (ஸல்) அவர்கள் ஏதும் கூறியிருக்கிறார்களா?

பாத்திமா:- ஆம். ஒருமுறை நபி(ஸல்) அவர்களின் சபைக்கு ஒரு முதியவர் வந்தார். அவருக்கு, சபையில்


இருந்த எவரும் இருக்க இடம் கொடுக்க வில்லை. இதனைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் "எங்களில், சிறியவர்களுக்கு இரக்கம் காட்டாத வர்களும், மூத்தோருக்கு மரியாதை செய்யாத வர்களும் எம்மைச் சேர்ந்தவர்களல்லர்" என்று உபதேசம் செய்தார்கள். ஆதலால், முஸ்லிம் களாகிய நாம் மூத்தோரைக் கண்ணியப்படுத்த வேண்டும்.

ஆஇஷா:- அவர்களை நாம் எவ்வாறு கண்ணியப் படுத்த வேண்டும்.

பாத்திமா:- அவர்களைச் சந்தித்தால் ஸலாம் கூற வேண் டும். அவர்கள் அமர்ந்த பின்பே நாங்கள் அமர வேண்டும். அவர்களைப் பெயர் கூறி அழைக்கக்கூடாது. அவர்களுக்குப் பட்டப் பெயர் சூட்டக்கூடாது. கேலி செய்யக் கூடாது. அவர்களுடன் உரத்த தொனியில் பேசக்கூடாது.

ஆஇஷா:- முஸ்லிம்களான மூத்தோர்களை மட்டுமா கண்ணியப்படுத்த வேண்டும்.

பாத்திமா:- இல்லை. முஸ்லிம் அல்லாத மூத்தவர்களையும் கௌரவிக்க வேண்டும் என்றே இஸ்லாம் கூறுகிறது.



ஆஇஷா:- இதனால் எமக்கு என்ன நன்மையுண்டு.

பாத்திமா:- "நாம் மூத்தோரைக் கண்ணியப்படுத்தினால், முதுமை அடையும்போது எம்மைக்கண்ணியப் படுத்துபவர்களை அல்லாஹ் ஏற்பாடு செய்வான்" என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அது மட்டுமல்ல; அவ்வாறு மூத்தோரைக் கண்ணியப் படுத்தினால் மற்றவர்கள் எம்மீது இரக்கமும் காட்டுவார்கள்.

ஆஇஷா:- ஆசிரியர்கள், ஆலிம்கள் ஆகியோரையும்

கண்ணியப்படுத்த வேண்டும் என்று கூறினீர் களே.

பாத்திமா:- ஆம். மூத்தோர் எம்மிலும் வயது கூடியவர்கள். ஆசிரியர்களும் ஆலிம்களும் வயதில் மட்டு மல்ல; அறிவிலும் கூடியவர்கள். ஆதலால், அவர்களை விசேடமாகக் கண்ணியப்படுத்த வேண்டும்.

ஆஇஷா:- அவர்களை எவ்வாறு கண்ணியப்படுத்த வேண்டும்.

பாத்திமா:- அவர்கள் எங்களுக்கு ஓத, வாசிக்க, எழுதக் கற்றுத் தருகிறார்கள். ஒழுக்கம் சொல்லித் தருகிறார்கள். நாம் தவறு செய்யும் போது எம்மைத் திருத்தி விடுகிறார்கள். பெற்றோர், சகோதரர்கள் போன்றே எம்மோடு அன்பாக நடக்கிறார்கள். ஆதலால், அவர்களோடு நாமும் அன்பாக நடக்க வேண்டும். அவர்கள் மனம் நோகும்படியாக நடக்கக்கூடாது. அவர்கள் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டும். வயதில் மூத்தவர்கள் அனைவரையும் நாம் மதிக்க வேண்டும்.

ஆஇஷா:- நான் இன்று மூத்தோரைக் கண்ணியப் படுத்துதல் தொடர்பான பல விடயங்களை

உங்களிடம் படித்துக் கொண்டேன். ஜஸாகல்லாஹு கைரன்.

**மூத்தோரைக் கண்ணியப்படுத்துவோம்.**
**சிறந்த முஸ்லிமாக வாழ்வோம்.**

**பயிற்சி**

**பின்வரும் தொடர்களிலுள்ள பொருத்தமற்ற சொல்லின் கீழ் கோடிடுக.**

1. **தந்தை, ஆசிரியர், பிள்ளைகள்** என்போர் மூத்தோருள் அடங்குவர்.
2. **மெதுவாகப் பேசுதல், அடக்கமாகப் பேசுதல், எதிர்த்துப் பேசுதல்** என்பன மூத்தோருக்குச் செய்யும் மரியாதை ஆகும்.
3. **கேலி செய்தல், மரியாதையாக நடந்து கொள்ளல், பட்டப் பெயர் சூட்டல்** என்பன தவறான பழக்கங்களாகும்.
4. ஆசிரியர்களும், ஆலிம்களும் எம்மை விட **வயதிலும், அறிவிலும், தொகையிலும்** கூடியவர்களாவர்.